செ.வெ.எண்:282 நாள்:28.04.2018

திருநெல்வேலி மாவட்டம் திருவேங்கடம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுமான பணிகளை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும் ஆலங்குளம் வட்டம் மாறாந்தையில் புதிய அரசு ஆரம் சுகாதார நிலையத்தினையும் திறந்து வைத்தார்கள்.

-----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் சுகாதார மாவட்டத்தில் சுகாதாரத்துறையின் மூலம் திருவேங்கடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம் கட்டும் பணிகளுக்கான பூமி பூஜை நிகழ்ச்சி மற்றும் ஆலங்குளம் வட்டம் மாறாந்தையில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா இன்று (28.04.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு ரூ.55 லட்சம் மதிப்பீட்டில் திருவேங்கடம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய புதிய கட்டிடம் கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார். இப் புதிய கட்டிடம் 2,500 சதுர அடி பரப்பளவில் மகப்பேறு பிரிவு, மருந்தகம் ஆய்வகம், ஊசி போடும் அறை, அவசர சிகிச்சை பிரிவு, மருத்துவ அலுவலர் அறை, மாற்றுத்திறனாளி கழிவறை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு தளம் உள்ளிட்ட வசதிகளுடன் 5 மாதங்களில் கட்டி முடிக்கப்படும். இதன் மூலம் இப் பகுதியில் உள்ள 29 கிராமங்களை சேர்ந்த 24,600 மக்கள் பயன்பெறுவார்கள்.

தொடர்ந்து மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆலங்குளம் வட்டம் மாறாந்தையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புதியதாக அறிவிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தினை திறந்து வைத்தார்கள். அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சொந்த கட்டிடம் கட்டும் வரை மாறாந்தை அரசு சேவை மைய கட்டிடத்தில் இயங்கும் இதன் மூலம் இப்பகுதியில் உள்ள 12 கிராமங்களை சேர்ந்த 24,472 பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.

முன்னதாக மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம் மலையன்குளம் ஊராட்சி ருத்ரா நகரில் ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்யில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர்.பி.பிரபாகரன், துணை இயக்குநர் சுகாதார பணிகள் திரு.செந்தில்குமார், பொதுப்பணித்துறை (சுகாதார பிரிவு) செயற்பொறியாளர் திரு.நாகராஜ், உதவி செயற்பொறியாளர் திருமதி.தனலெட்சுமி, ஆலங்குளம் வட்டார மருத்துவ அலுவலர் திரு.ஆறுமுகம், திருவேங்கடம் வட்டார மருத்துவ அலுவலர் திரு.பாலவிக்னேஷ், முக்கிய பிரமுகர்கள் திரு.சுப்பையாபாண்டியன், திரு.ஆவின் ரமேஷ், திரு.ஆறுமுகம், திரு.வேல்முருகன், திரு.சேர்மபாண்டி, திரு.NHM. பாண்டியன், திரு.ராஜன், திரு.ஜெயராமன், மற்றும் மருத்துவ அலுவலர்கள், வட்டார சுகாதார மேற்பார்வையாளர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.